DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 187/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W. 6 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கனகராஜ் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலுக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 18.02.2025.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. புகாரில் குறிப்பிட்ட மின் இணைப்பு யார் பெயரில் இருந்தது என்றால் சந்தியா மகேஷ் பெயரில் இருந்தது. புகார் சந்தியா மகேஷ் கொடுததாரா என்றால் எஸ் பி ஆபிஸில் கொடுத்து தபால் மூலம் வந்தது புகார் பெற்ற பின்னர் யார் யாரை சாட்சிகளாக அழைத்தீர்கள் என்றால் சந்தியா அவரது கணவர் மகேஷ். புகார்தாரர் தரப்பில் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டது என்றால் புகாரில் இணைக்கப்பட்டதுடன் சரி . சந்தியாவின் பெயரில் இருந்து பத்திரம் நேரடியாக எதிரி கோபாலகிருஷ்ணன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டதா என்றால் இல்லை.

2. புகார் உடன் பொது அதிகார பத்திரம் வந்ததா என்றால் புகாரில் இணைப்பில் இல்லை. சந்தியா இதே போன்று கொடுத்த வேறு நில அபகரிப்பு புகார் தெரியுமா என்றால் தெரியாது. சந்தியா சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்த விபரம் தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. இப்புகார் கொடுப்பதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பு சந்தியா மற்றும் மகேஷ் கொடுத்த புகாரில் விசாரிக்க விசாரணைக்கு பின்னர் RCS ஆக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

விசாரணைக்கு எதிரி தரப்பில் யார் யாரை அழைத்தீர்கள் என்றால் முன் பிணையம் பெற்ற பின்னர் கோபாலகிருஷ்ணனை விசாரித்தோம்.

3. புகார் பெற்ற பின்னரே கோபாலகிருஷ்ணரை விசாரிக்கவில்லை என்றால் ஆமாம் தேடினோம் கிடைக்கவில்லை. மேலும் திருமதி சந்தியா பவர் கொடுத்த அன்றை விற்பனை செய்து விட்டார்கள் என்றாலும் அதனால் வழக்கை தாக்கல் செய்யவும் நிலத்தின் மீது உரிமையும் இல்லாத சமயத்தில் தற்போது நிலம் அதிக விலைக்கு செல்வதால் நிலம் அபகரிக்க வேண்டி எதிரியின் மீது போலியான கையொப்பம் விட்டதாக கூறி நிலத்தினை உரிமை கூற முயற்சிக்கிறார் என்றாலும் மேலும் அச்சொத்தானது முறையான கைமாற்றுத் தொகை கொடுத்து எதிரியானவர் திரு. கோபாலகிருஷ்ணன் தினேஷ் என்பவரிடமிருந்து வாங்கியுள்ளார் என்றாலும் மேற்படி போலி கையெழுத்து எதிரியின் உடையது அல்ல என்றாலும் அவர் அதற்கு எவ்வித சாட்சிகளும் இல்லாமல் வேண்டுமென்று பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.